LIBRARY
12 OCT 2011
Eastern University, Sri Lanka

# EASTERN UNIVERSITY, SRI LANKA

## Faculty of Commerce and Management

**First Examination in Bachelor of Business Administration 2007/2008 (Proper/Repeat) and First Examination in Bachelor of Economics - 2008/2009 (Proper/Repeat) (March/April 2011)**

**(External)**

**EXB/EXE 1052 Career Guidance**

**Answer all three (3) questions.** **Time: 02 hours**

எல்லா வினாக்களுக்கும் விடை அளிக்குக. நேரம்: 02 மணித்தியாலங்கள்

**Q1.**

(a) வணிக முகாமைத்துவத் துறையில் உயர் கல்வி கற்கும் மாணவன் அல்லது மாணவி என்ற வகையில் உமது வாழ்க்கைத்தொழில் தொடர்பில் நீர் மேற்கொள்ள வேண்டியுள்ள முக்கிய வாழ்க்கைத் தொழில்சார் தீர்மானங்களை (Career Decisions) ஒழுங்கு முறைப்படி குறிப்பிடுக.

(10 புள்ளிகள்)

(b) "வாழ்க்கைத்தொழில் வழிகாட்டல் (Career Guidance) என்பது ஒருவர் தனக்கு பொருத்தமான தொழிலை தேர்ந்து எடுப்பதற்கு வழிகாட்டும் ஒரு சேவையாகும்." இக்கூற்றுடன் நீர் உடன்படுகின்றீரா? இல்லையா? காரணம் தருக.

(05 புள்ளிகள்)

(c) ஒரு தொழில் தேடல் செய்முறையில் (a job searching process), சுயவிபரக் கோவை (Resume/Bio-data) மற்றும் நிறுவனங்களைப் பற்றி ஆய்வு செய்தல் (Researching about organisations) ஆகியவற்றின் முக்கியத்துவத்தை விபரிக்குக.

(10 புள்ளிகள்)

(d) வாழ்க்கைத்தொழில் அபிவிருத்தியின் (Career development) நான்கு கட்டங்களையும் (stages) அடையாளம் கண்டு, மிகச்சுருக்கமாக விபரிக்கவும்.

(05 புள்ளிகள்)

(மொத்தம் 30 புள்ளிகள்)

**Q2.**

(a) "பொதுவாக இலங்கையில் உயர்கல்வி பெற்ற இளம் சந்ததியினர் தொழில் முயற்சியாளர்களாக ஆகுவதற்கு காட்டும் ஆர்வத்தை விட தொழில் தேடுனர்களாக இருந்து சம்பளம் பெறும் தொழில் ஒன்றை, அதுவும் அரச துறையில் பெற்றுக் கொள்வதிலேயே அதிக நாட்டம் செலுத்துகின்றனர்."

(i) இந்நிலைமைக்கான அடிப்படைக் காரணங்களை விபரிக்குக.

(06 புள்ளிகள்)

(ii) இலங்கையில் இந்நிலைமையை எதிர்காலத்தில் சீர்செய்து உயர்கல்வி பெற்ற இளம் சந்ததியினர் தொழில் முயற்சியாளர்களாக ஆக்குவதற்கு வாழ்க்கைத்தொழில் வழிகாட்டலின் (Career Guidance) பங்களிப்பை தருக.

(06 புள்ளிகள்)

(iii) உயர்கல்வி பெற்ற இளம் சந்ததியினரை தொழில் முயற்சியாளர்களாக ஆக்குவதற்கு பொருத்தமான வாழ்க்கைத்தொழில் வழிகாட்டல் சேவை வகைகள் (categories of career guidance services) மூன்றினைக் குறிப்பிடுக.

(03 புள்ளிகள்)

(b) பின்வருவனவற்றுள் எவையேனும் மூன்றிற்கு மட்டும் (03) சிறுகுறிப்பு எழுதுக.

(i) ஹொலண்ட்டின் வாழ்க்கைத் தொழில் கோட்பாடு (Holland's Career Theory)

(ii) ஏனியக்கிராம் சோதனை (The Enneagram Test)

(iii) குணாம்சக் காரணி அணுகுமுறை (The Traits Factor Approach)

(iv) சமூகச் சிந்தனைசார் வாழ்க்கைத்தொழில் கோட்பாடு (Social Cognitive Career Theory)

(v) வாழ்க்கைத்தொழில் முகாமைத்துவப் பிரச்சினைகளும் அவற்றுக்கான தீர்வுகளும் (Career management related issues and solutions)

(03 x 05 = 15 புள்ளிகள்)

(மொத்தம் 30 புள்ளிகள்)

Q3. உள்ளூர் வணிக வங்கியொன்று பின்வரும் தொழில் நிலை வெற்றிடங்களுக்கு பொருத்தமானவர்களிடம் இருந்து விண்ணப்பங்களைக் கோரியுள்ளது. அவற்றின் விபரங்கள் பின்வருமாறு:

## ABC வங்கி

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பயிற்சி/ஒப்பந்த அடிப்படையில் சேவையில் இணைத்துக் கொள்வதற்கு ஆற்றலும், சுறுசுறுப்பும் மிக்க இளைஞர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

01 முகாமைத்துவ பயிலுனர்

கல்வி/தொழில் சார்ந்த தகைமைகள்

அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் வங்கியியல், நிதியியல், வர்த்தகம், பொருளாதாரம், முகாமைத்துவம், வர்த்தக நிர்வாகம், கணிதம், புள்ளிவிபரவியல், கணனி விஞ்ஞானம், மனிதவள முகாமைத்துவம், சமூக விஞ்ஞானம், விவசாயம், சட்டம் அல்லது தொடர்புடைய ஏதேனும் துறையில் வகுப்புடன் (with Class) பட்டம் அல்லது பட்டப்பின் படிப்பு தகைமையைக் கொண்டவராக இருத்தல் வேண்டும்.

அல்லது

சட்டத்தரணி

அல்லது

CIMA/ICA யில் முழுமையாக தகுதி

ஏனைய தகைமைகள்

- தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள், சிறந்த தொடர்பாடலுடன் கூடிய தலைமைத்துவப் பண்புகளையும், உள்ளார்ந்த திறமைகளையும் குழுவாக இயங்கத்தக்கவராகவும் இருத்தல் வேண்டும்.
- கணனி அறிவு தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் சிறந்த முறையில் தொடர்பாடக்கூடிய ஆற்றல் என்பன மேலதிக அனுகூலங்களாகும்.

வயது: விண்ணப்ப முடிவு திகதியன்று 30 வயதுக்குட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

தெரிவு நடைமுறை

- எழுத்து மூலதெரிவுப் பரீட்சையும், நேர்முகப்பரீட்சையும்.
- தெரிவுப் பரீட்சைக்கு தாங்கள் தோற்ற விரும்புகின்ற மொழிமூலத்தை, தயவு செய்து தெளிவாகக் குறிப்பிடுக. (சிங்களம்/தமிழ்/ஆங்கிலம்)

02 பயிலுனர் அபிவிருத்தி உதவியாளர்

கல்வி/தொழில் சார்ந்த தகைமைகள்

அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனமொன்றில் விவசாயத்தில் டிப்ளோமாவைக் கொண்டிருத்தல்

அல்லது
அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் சம்பந்தப்பட்ட துறையில் பட்டத்தைப் பெற்றிருத்தல்.

வயது: விண்ணப்ப முடிவு திகதியன்று 30 வயதுக்குட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

தேவைப்படும் ஏனைய தகைமைகள்
- தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் சரளமாக தொடர்பாடக் கூடிய திறமை.
- மோட்டார் சைக்கிள்களை ஓட்டுவதற்கு சட்டபூர்வ வாகன அனுமதிப்பத்திரம் வைத்திருத்தல்.

தெரிவு நடைமுறை: நேர்முகப்பரீட்சையின் மூலம்.

03 பயிலுனர் சட்ட உத்தியோகத்தர்
கல்வி/தொழில் சார்ந்த தகைமைகள்
சட்டத்தரணி மற்றும் பிரசித்தி பெற்ற நொத்தாரிசு

அனுபவம்
- சிவில் வழக்குகள் தொடர்பான நீதிமன்ற வேலைகள், காணி மூல உறுதிப்பத்திரங்களைப் பரீட்சித்தல், தொழில் உறவு நடவடிக்கைகள் போன்றவற்றில் 3 வருட முன் அனுபவம்.

ஏனைய தகைமைகள்
- கணணி அறிவு மற்றும், ஆங்கிலப்புலமை என்பன கட்டாயமாகும்.
குறிப்பாக தமிழ் மொழியில் தொடர்பாடக்கூடிய சிறந்த திறமை
- தலைமைத்துவப் பண்புகள்

வயது: விண்ணப்ப முடிவு திகதியன்று 30 வயதுக்குட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

தெரிவு நடைமுறை: நேர்முகப்பரீட்சையின் மூலம்.

04 உதவி சிவில் பொறியியலாளர்
கல்வி/தொழில் சார்ந்த தகைமைகள்
NDT – சிவில் பொறியியல் அல்லது HNDE அல்லது அற்கு சமமானது.
அனுபவம்
சிவில் பொறியியல் தகைமையுடன் அங்கீகரிக்கப்பட் தனியார் அல்லது அரச நிறுவனமொன்றில் 05 ஆண்டு கால தகைமைக்குப் பின்னான அனுபவம்.
வயது: விண்ணப்ப முடிவு திகதியன்று 40 வயதுக்கு மேற்படாதிருத்தல்.
தெரிவு நடைமுறை: நேர்முகப்பரீட்சையின் மூலம்.

*விண்ணப்ப நடைமுறை*
முழுமையான சுயவிபரக்குறிப்புகளுடன் பிறப்புச் சான்றிதழ், கல்வி/தொழிற் தகைமைச் சான்றிதழ்களின் போட்டோப்பிரதிகள் மற்றும் உறவினரற்ற இரு மத்தியஸ்தர்களின் தொடர்புத் தகவல்கள் என்பவற்றை பதிவுத் தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "முகாமைத்துவ பயிலுனர்/பயிலுனர் அபிவிருத்தி உதவியாளர்/பயிலுனர் சட்ட உத்தியோகத்தர்/உதவி சிவில் பொறியியலாளர்" என்பவற்றுள் விண்ணப்பத்திற்குரிய பதவியின் பெயரைக் குறிப்பிட்டு இந்த விளம்பரம் வெளியிடப்பட்ட 10 தினங்களுக்குள் கீழ்வரும் முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

பிரதான முகாமையாள
தொழிலவள மற்றும் துறை அபிவிருத்
**ABC** வங்கி, தலைமை அலுவலகக் கட்டிட
இல.04: கொழும்பு -1

எவ்விதத்திலேனும் ஆதரவு கோரல் தகமையின்மைக்கு வழிவகுக்கும். விண்ணப்பங்களை தெரிந்தெடுக்கும் உரிமை வங்கிக்குண்டு.

மேற் தரப்பட்டுள்ள தொழில் விளம்பரத் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்குக.

**(a)** மேற்காட்டப்பட்ட விளம்பரத்தின் படி நுழைவு நிலை தொழில்கள் (entry level jobs) மற்றும் நுழைவு நிலை சாராத தொழில்களை (non-entry level) தனித்தனியாகப் பட்டியற்படுத்துக. அதற்கான காரணங்களையும் குறிப்பிடுக.

(06 புள்ளிகள்)

**(b)** இலங்கையில், வணிக வங்கிகள் நுழைவு நிலை/மட்டத் (entry level) தொழில்களுக்கு தேவையானவர்களை ஆட்சேர்ப்பு செய்வதில் விண்ணப்பதாரிகளிடம் இருந்து எதிர்பார்க்கும் தனிப்பட்ட இயல்புகள் அல்லது முக்கிய பண்புகள் (personal qualities) ஐந்தினைக் குறிப்பிடுக.

(05 புள்ளிகள்)

**(c)** இலங்கையில், வணிக வங்கிகள் நுழைவு நிலை/மட்டத் (entry level) தொழில்களுக்கு தேவையானவர்களை ஆட்சேர்ப்பு செய்தில் விண்ணப்பதாரிகளிடம் இருந்து எதிர்பார்க்கும் முக்கிய திறன்கள் மற்றும் ஆற்றல்கள் (skills and abilities) ஐந்தினைக் குறிப்பிடுக.

(05 புள்ளிகள்)

**(d)** இலங்கையில், வணிக வங்கிகள் நுழைவு நிலை/மட்டத் (entry level) தொழில்களுக்கு தேவையானவர்களை ஆட்சேர்ப்பு செய்தில் விண்ணப்பதாரிகளிடம் இருந்து எதிர்பார்க்கும் மனப்பாண்மையின் தன்மைகள் (attitudes) ஐந்தினைக் குறிப்பிடுக.

(05 புள்ளிகள்)

**(e)** இலங்கையில் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் வர்த்தக முகாமைத்துவ துறையில் முதலாம் நிலை வகுப்புடன் கூடிய பட்டம் ஒன்றை நீர் பெற்றுள்ளீர் என கொண்டு, மேற்காட்டப்பட்டுள்ள தொழில் விளம்பரத்தின் படி, நீர் விண்ணப்பிக்கக் கூடிய தொழில் எது எனக் குறிப்பிடுக.

(02 புள்ளிகள்)

**(f)** மேலே நீர் குறிப்பிட்ட பதவிக்கு அல்லது தொழிலுக்கு விண்ணப்பம் ஒன்றினை மேற்கொள்வதில் நீர் பின்பற்ற வேண்டிய முக்கிய செயற்பாடுகளின் பட்டியல் ஒன்றைத் ஒழுங்குமுறையின் அடிப்படையில் தயாரிக்குக.

(05 புள்ளிகள்)

**(g)** பொதுவாக தொழில் ஒன்றுக்குப் பொருத்தமானவர்களை தெரிவு செய்வதில் வங்கிகள் பல எழுத்துப் பரீட்சைகளை (Written Examinations) நடாத்துகின்றன. அவ்வாறான ஐந்து பரீட்சைகளைப் பெயரிடுக.

(05 புள்ளிகள்)

**(h)** நீர் விண்ணப்பித்த பதவி அல்லது தொழில் தொடர்பில் எழுத்துப் பரீட்சையின் பின்னர், ஒரு நேர் காணல் பரீட்சைக்கான (an interview) அழைப்பினை நீர் எதிர்நோக்கியுள்ளீர் எனக் கொண்டு, அவ்நேர்காணலுக்கு எவ்வாறு உம்மைத் தயார்ப்படுத்துவீர் என்பதை விபரிக்குக.

(07 புள்ளிகள்)

(மொத்தம் 40 புள்ளிகள்)